MELUR MUNICIPALITY
Minutes of the Council Meeting held on 24.07.2018 (Ordinary)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 299 | **பொருள் எண்.1**<br><br>Temporary Appointing standing Counsel Mr.A.Pandiyarajan .B.A.,B.L., Advocate<br><br>The Municipality has decided to depute yourself namely A.Pandiarajan as standing Counsel on temporary measure to conduct the case on behalf of Municipality before the Madurai Bench of Madras High court. The above deputation is to beis existence till the Commissionrate of Municipal Administration , Chennai appointing Standing Counsel through proper mode. | சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதிபெற்று நகராட்சி வழக்கறிஞர் நியமனம் குறித்த பரிந்துரை செய்யப்படவிருப்பதால் நிராகரிக்கப்படுகிறது. |
| 300 | **பொருள் எண்.2**<br><br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தலின்படி இந்நகராட்சி எல்லைக்குள் கீழ்க்கண்ட பகுதிகளில் Onsite composting அமைக்கப்பட உள்ளது.<br>1. நகராட்சி அலுவலக வளாகம்<br>2. மல்லிகை நகர் பூங்கா<br>3. அண்ணா காலனி<br>மேற்கண்ட இடங்களில் Onsite composting அமைக்க ரூ.5.00இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கும், பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 301 | **பொருள் எண்.3**<br><br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் மனைப்பிரிவுகளில் பூங்காவிற்கு என ஒதுக்கப்பட்ட இடங்களில் முள்வேலி அமைக்கவும், குப்பை சேரும் இடத்திலே உரக்கிடங்கு அமைக்கவும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி இந்நகரில் உள்ள ஆறு மனைப்பிரிவுகளில் முள்வேலி அமைக்கவும், குப்பை சேரும் இடத்திலேயே உரக்கிடங்கு அமைக்கவும் ரூ.9.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கும், பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 302 | **பொருள் எண்.4**<br><br>இந்நகராட்சியால் TURIP திட்டத்தின் நடைபெறும் சாலை மேம்பாட்டு பணி குறித்து சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் வழக்குதொடரப்பட்டுள்ளது. வழக்கு எண். மேற்கண்ட வழக்கை நடத்துவதற்கு வக்கீல் கட்டணம் ரூ. 17,000/– ஐ அரசு வழக்கறிஞர் திரு.ஏ.பாண்டியராஜன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 303 | **பொருள் எண்.5**<br><br>இந்நகராட்சி பகுதிகளில் வீட்டு வரிவிதிப்பு எண்ணிக்கை அளவிற்கு குடிநீர் இணைப்பு வழங்குவதை முன்னிட்டு மொத்தம் 8000 குடிநீர் இணைப்பு வழங்க ரூ.453.00இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து அனுப்பப்பட்டதின் மேல் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.13277/2018/டபிள்யுஎஸ்1 நாள்.19.06.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>அதன் மீது மேற்கண்ட மதிப்பீட்டின் மீது தலைமைப் பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | |
| 304 | **பொருள் எண்.6**<br><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டம் **2018–19**ன் கீழ் பணிகள் மேற்கொள்ள ரூ.**300.00**இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து அதற்குரிய நிதி வழங்க அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டிருந்தது.<br><br>அதன்மீது கடந்த **27.06.2018** அன்று திட்ட அனுமதி வழங்கும் குழுவால் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br><br>**1.** தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட் மானிய நிதி — ரூ.**114.00** இலட்சம்<br>**2.** மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி — ரூ.**90.00** இலட்சம்<br>**3.** மாநில நிதிக் குழுமானிய ஊக்க நிதி — ரூ.**66.00** இலட்சம்<br>**4.** நகராட்சி பங்களிப்பு — ரூ.**30.00** இலட்சம்<br>———————————<br>ரூ.**300.00**இலட்சம்<br>———————————<br><br>மேற்கண்டவாறான நிதி ஒதுக்கீட்டின்படி திட்ட பணிகள் மேற்கொள்ள தலைமைப் பொறியாளரின் தொழில்நுட்ப அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 305 | **பொருள் எண்.7**<br><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட எஸ்.எம்.நகர் மற்றும் காந்திஜி பூங்கா ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள உயர்மட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளில் திரவ நிலை குளோரினேசன் Plant அமைக்க ரூ.9.80 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட மதிப்பீட்டிற்கும், பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 306 | **பொருள் எண்.8**<br><br>இவ்வலுவலக திட்டப்பணிகளான Zonation Map M.C.C விரிவான திட்ட அறிக்கை மற்றும் 8000 குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயார் செய்யவும், அது தொடர்பான செலவினங்கள் சேர்த்து மொத்தம் ரூ.40000/– செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 307 | **பொருள் எண்.9**<br><br>இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் குப்பைகளை எடைபோடு எடைமேடை (Electronic weighbridge) க்கு தொழிலாளர் துறை ஆய்வர், மதுரை அவர்களிடமிருந்து உரிமம் எண்.1437084 நாள்.29.09.2016 ன்படி 28.09.2017 வரை உரிமம் பெறப்பட்டுள்ளது.<br>ஆனால் 31.09.2017 முதல் எடைமேடையில் பழுது ஏற்பட்ட காரணத்தால் எடைமேடை இயக்கப்படவில்லை உரிமம் புதுப்பிக்கவும் இல்லை. தற்போது பழுது பார்க்கப்பட்டு விட்டதால் இயக்குவதற்கு ஏதுவாக உரிமத்தை புதுப்பிக்க தொழிலாளர் துணை ஆய்வர், மதுரை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.6100/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>308</td>
<td>

## பொருள் எண்.10

இந்நகராட்சியின் கணினி பிரிவில் உள்ள RICOH பிரிண்டரின் பழுதுகளை நீக்கம் செய்ய பெறப்பட்ட விலைப்புள்ளிகள் கீழ்க்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

<table>
<tr><td>1)</td><td>Tirupathi Office Products<br>211, Naicker New street<br>Madurai-625001</td><td>ரூ.13701/–</td></tr>
<tr><td>2)</td><td>ELITE, Madurai</td><td>ரூ.15078/–</td></tr>
<tr><td>3)</td><td>Delta Agencies,<br>39/B, Chokkalinga nagar<br>Madurai</td><td>ரூ.14913/–</td></tr>
</table>

அலுவலகக்குறிப்பு

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளியில் மிகக்குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மதுரை Tirupathi Office Products நிறுவனத்தின் மூலம் பணிகளை மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1489/2018/சி1)
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>309</td>
<td>

## பொருள் எண்.11

இந்நகராட்சியில் உள்ள கணினி மற்றும் பிரிண்டர்களை ஆண்டு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள பெறப்பட்ட விலைப்புள்ளிகள் கீழ்க்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

<table>
<tr><td>1)</td><td>Sakthi Computers<br>Sales of Service<br>161/4 NagaiKadai bazaar,<br>Alagar Kovil road,Melur</td><td>ரூ.1,16,348 (GST உட்பட)</td></tr>
</table>
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2)</td><td>Jeeva Systems,<br>16, Channel road,<br>Melur</td><td>ரூ.1,22,900 (GST இல்லாமல்)</td></tr>
<tr><td>3)</td><td>Raj Computers<br>121/2, Kathapattu chettiyar road,<br>Melur</td><td>ரூ.1,08,700(GST இல்லாமல்)</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>
மேற்கண்ட விலைப்புள்ளியில் மிகக்குறைந்த விலைப்புள்ளி (GST உட்பட) கொடுத்த Melur Sakthi computers நிறுவனத்திற்கு பணி உத்திரவினை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>
(கோப்பு எண்.1928/2018/சி1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>310</td>
<td>
பொருள் எண்.12<br><br>
மனிதக்கழிவுகளை மனிதனே அகற்றக்கூடிய பணியில் உள்ள பணியாளர்களை கணக்கெடுப்பு செய்வதற்கான முகாம் 13.04.2018 மற்றும் 16.04.2018 ஆகிய இருதினங்களில் நடத்திட மாவட்ட ஆட்சியர், மதுரை அவர்களின் 22.03.2018 கூட்டத்தில் அறிவுரை வழங்கப்பட்டதை தொடர்ந்து முகாம் நடைபெறும் விபரங்களை பிட் நோட்டீஸ் அச்சடித்தல் மற்றும் பேனர் அடிப்பதற்கு விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td></td><td>பிட்நோட்டீஸ்</td><td>பேனர்</td></tr>
<tr><td>1) J.P.புக் பைண்டிங்</td><td>2400</td><td>2600</td></tr>
<tr><td>2) ஸ்ரீராம் பவர் பிரஸ்</td><td>3600</td><td>4000</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் J.P.புக் பைண்டிங் & பிரிண்டிங் ஒர்க்ஸ்–இன் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணிமேற்கொண்டதையும், தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(கோப்பு எண்618/எச்1/2018)
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 311 | **பொருள் எண்.13**<br><br>இந்நகராட்சியின் 2018–2019 முதல் 2020–21ம் ஆண்டு வரை குத்தகை உரிமம் பொது ஏலம் கீழ்க்கண்ட விபரப்படி உள்ள வரிசை எண்.1 முதல் 5 இனங்களுக்கு 5 முறை கோரப்பட்டும் ஒருவர் கூட பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர முன் வரவில்லை. கீழ்க்கண்ட இனங்களுக்கு ஒவ்வொரு முறையும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளை நாளிதழில் விளம்பரம் செய்யும் கட்டணத்தொகையால் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுகிறது. எனவே கீழ்க்கண்ட 5 இனங்களில் 2 முதல் 5 வரை உள்ள இனங்களை 2018–19 முதல் 2020–2021ம் ஆண்டு வரை பல்வகைகேட்பு குத்தகை கேட்பிலிருந்து நீக்கம் செய்யவும் வரிசை எண்.1ல் உள்ள பேருந்து நிலையத்திற்குள் வந்துசெல்லும் பேருந்து நுழைவு கட்டணம் நிர்வாகம் மூலம் வசூல் செய்து கொள்ளவும், மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>1. பேருந்து நிலையத்திற்கு வந்துசெல்லும் பேருந்து நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்<br>2. நகராட்சி வாரச்சந்தையில் சந்தை நாட்களில் சந்தையில் விழும் சாணங்களை அனுபவித்துக் கொள்ளும் உரிமம்<br>3. நாய்குடி பள்ளத்தில் புல் பண்ணையில் சீமைப்புல் அனுபவித்துக் கொள்ளும் உரிமம்<br>4. எம்.மலம்பட்டி ஊரணியில் மீன்பிடித்துக் கொள்ளும் உரிமம்<br>5. கருத்தப்புளியம்பட்டியில் உள்ள சொக்கர் ஊரணியில் மீன்பிடித்துக் கொள்ளும் உரிமம்.<br><br>அலுவலகக்குறிப்பு<br>அ) மேற்கண்ட வரிசை எண்.2 முதல் 5 வரை உள்ள இனங்களை 2018–19 ஆம் ஆண்டு முதல் 2020–2021 ஆண்டு வரை குத்தகை கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதக்கலாம்.<br>ஆ) மேற்கண்ட வரிசை எண்.1 ல் உள்ள பேருந்து நிலையத்திற்கு வந்துசெல்லும் பேருந்து நுழைவு கட்டணத்தை நிர்வாக மூலம் வசூலி செய்துகொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>இ) 2018–19ம் ஆண்டு பேருந்து நிலையத்தில் உள்ள குறைபாடுகள் காரணமாக புதுப்பித்ததில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக நகராட்சிக்கு ஏற்ப்பட்ட நிதி இழப்பை இழப்பெனக் கருதாமல் இருக்கவும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 312 | **பொருள் எண்.14**<br><br>இந்நகராட்சியின் ஏலம் கோர வேண்டிய ஐந்து இனங்களுக்குரிய பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாலை முரசு நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு ரூ.22050/—ஐ சென்னை பிரைட் அட்வர்டைசிங் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.2985/2017/அ2) | அனுமதிக்கப்பட்டது |
| 313 | **பொருள் எண்.15**<br><br>மேலூர் நகராட்சி பகுதிகளுக்கு காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் மூலமாக தினசரி ஒரு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரைப்படி நகராட்சி குடிநீர் விநியோக பகுதிகளை சிறுமீட்டர் பொருத்தப்பட்ட தொகுதிகளாக பிரித்து தினசரி 24 மணி நேரமும் சீரான அழுத்தத்துடன் குடிநீர் இழப்பின்றி குடிநீர் விநியோகம் செய்யும் வகையில் DMA என்ற நிலையில் அமைக்க வேண்டியுள்ளது. இதற்கு குடிநீர் திட்டத்தில் தேவையாக உட்கட்டமைப்புகள் மற்றும் அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்வது சம்பந்தமாக ஆய்வு செய்து கண்டறிய வேண்டியுள்ளது.<br><br>எனவே மேற்கண்ட மேலூர் நகராட்சிக்கு மேற்படி DMA முறையில் உட்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள ஆய்வு பணிகளை மேற்கொள்ள தொழில்நுட்ப ஆலோசகர் நியமனம் செய்தல் மற்றும் அதற்கான தெரிவிக்கப்படும் ஆலோசனை கட்டணத்தை செலுத்தவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம் | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 314 | **பொருள் எண்.16**<br><br>இந்நகராட்சியின் கணினிப்பிரிவில் உள்ள RICOH பிரிண்டர் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் மேற்கண்ட பிரிண்டரை பழுது நீக்கம் செய்ய ஆகும் செலவினத் தொகை ரூ.25000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கும் , பார்வைக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அ) மேற்கண்ட பிரிண்டர் பழுது நீக்கம் செய்ய ஆகும் செலவினத் தொகை ரூ.25000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) அலுவலக பணியின் அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி கோரி பணியினை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.1489/2018/சி1) | அனுமதிக்கப்பட்டது |
| 315 | **பொருள் எண்.17**<br><br>அலுவலக பயன்பாட்டிற்கு கீழ்க்கண்டவிபரப்படி உள்ள அலுவலகப் பயன்பாட்டிற்கான முத்திரைகள் செய்வதற்கு விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| வ. எண். | விபரம் | J.P. புக்பைண்டிங் & பிரிண்டிங் ஒர்க்ஸ் ரூ. | ஜெயம் ஜெராக்ஸ் & ஜாப் டைப்பிங் |
|---|---|---|---|
| 1. | ஆணையாளர் முத்திரை | 600 | 660 |
| 2. | நகராட்சி அலுவலக முத்திரை | 480 | 520 |
| 3. | Bill passed seal | 150 | 160 |
| 4. | Cheque no seal | 150 | 160 |
| 5. | Received seal | 450 | 480 |
| 6. | Cancelled seal | 360 | 390 |
| 7. | Attested seal | 360 | 390 |
| 8. | A/c pay Seal | 100 | 100 |
| | Total | 2650 | 2860 |

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br>வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் J.P. புக்பைண்டிங் & பிரிண்டிங் ஒர்க்ஸ்–ன் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். | |
| 316 | **பொருள் எண்.18**<br><br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.609781/2018/TP3 நாள்.12.06.2018 ன்படி மேலூர் நகராட்சியில் பகுதியில் உள்ள அனுமதியற்ற தனிமனைகளை முறைப்படுத்த 27.06.2018 அன்று நடத்தப்பட்டதை பொதுமக்கள் அறியும் வண்ணம் 5000 எண்ணிக்கையிலான பிட்நோட்டீஸ் அச்சடிப்பதற்கான விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>1. தேவா ஆஃப்செட் பிரிண்டர்ஸ், மதுரை ரூ.5200<br>2. சார்ப் ஆஃப்செட் பிரிண்டர்ஸ், மதுரை ரூ.4500<br>3. ஏழுமலையான் பிரிண்டர்ஸ், மதுரை ரூ.4900<br>அலுவலகக்குறிப்பு<br><br>குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள சார்ப் ஆஃப்செட் பிரிண்டர்ஸ், மதுரை நிறுவனத்திற்கு பணிஉத்தரவு வழங்கவும், செலவினத்தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 317 | **பொருள் எண்.19**<br>இந்நகராட்சியால் இயக்கப்படும் அம்மா உணவகத்தில் பழுதடைந்த பொருட்கள் (கிரைண்டர் உட்பட) மற்றும் புதிதாக வாங்கப்பட உள்ள பொருட்களுக்கு ரூ.4.00இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கும், பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 318 | **பொருள் எண்.20**<br>இந்நகராட்சிக்குச் சொந்தமான வாரச்சந்தை வணிக வளாகத்தில் அமைந்துள்ள Sunshade பழுதடைந்து உள்ளதை பொதுமக்களின் பாதுகாப்பு கருதி இடித்து அகற்றிவிட்டு தகரத்தில் Shet | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அமைக்க ரூ.1.60 இலட்சத்திறகு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அந்த மதிப்பீட்டிற்கும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | |
| 319 | **பொருள் எண்.21**<br>இந்நகராட்சிக்குட்பட்ட கருத்தப்புளியம்பட்டி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் முதல்தளம் கட்டி முழுவதும் முடிவடையாமல் பள்ளி நிர்வாகம் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இதுதொடர்பாக நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளது. பள்ளி மாணவர்களின் நலனை கருத்தில்கொண்டு பள்ளி கட்டிடத்தின் மீதமுள்ள பகுதிகளை கட்டி முடிக்க ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கும், பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 320 | **பொருள் எண்.22**<br>இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட 8 இடங்களில் பொதுமக்களின் நலன்கருதி சிறிய பாலங்கள் அமைக்க ரூ.3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கும், பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 321 | **பொருள் எண்.23**<br>இந்நகராட்சிக்குச் சொந்தமான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் பொதுமக்களின் நலன் கருதி Electro Chlorniation மூலமாக Chlorination பணி மேற்கொள்ள ரூ.3.70இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கும் பணிமேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 322 | **பொருள் எண்.24**<br>இந்நகராட்சிக்குச் சொந்தமான உரக்கிடங்கில் கணினி அறையில் ஜன்னல்களை அடைக்கவும், குப்பைகளை உரம் தயாரிக்கும் வண்ணம் சலித்து தரம் பிரிக்க சல்லடை தயார் செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.8000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மேற்கண்ட பணியானது அவசரமாக மேற்கொள்ள வேண்டியதால் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 323 | **பொருள் எண்.25**<br>இந்நகராட்சி பகுதிகளில் கொசுக்களால் பரவும் நோய்களை தடுக்கும் நடவடிக்கையாக கொசு உற்பத்தி இடங்களை கண்டறிந்து அவற்றை அழித்து தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு 40 DBC பணியாளர்கள் பொதுசுகாதாரத்துறையின் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். நகர்மன்ற தீர்மான எண்.269 நாள்.21.05.2018 ன்படி 01.04.2018 முதல் 30.06.2018 உள்ள மூன்று மாதங்களுக்கு மேற்கண்ட பணியாளர்களின் பணி நீட்டிக்கப்பட்டது. தற்போது பருவமழைக்காலம் துவங்கிவிட்டபடியால், டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள மேற்கண்ட பணியாளர்களின் பணிக்காலத்தை 01.07.2018 முதல் 31.12.2018 வரை ஆறு மாதங்களுக்கு நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.13.00இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |